TETICMI/2026

Don't write anything in this space

Booklet Serial No. :

Don't write anything in this space

தேர்வு : ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு (தொகுதி-IC பணிகள்) தமிழ்நாடு பள்ளி கல்வி பணிகளில் அடங்கிய மாவட்ட கல்வி அலுவலர் பதவிக்கான முதன்மை எழுத்துத் தேர்வு

பாடம் : தமிழ்மொழி தகுதித் தேர்வு (பத்தாம் வகுப்புத் தரம் (தாள் – I)) (விரிந்துரைக்கும் வகை)

தேர்வு நாள் : 22.03.2026 மு.ப.

தேர்வு : ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு (தொகுதி-IC பணிகள்) தமிழ்நாடு பள்ளி கல்வி பணிகளில் அடங்கிய மாவட்ட கல்வி அலுவலர் பதவிக்கான முதன்மை எழுத்துத் தேர்வு

பாடம் : தமிழ்மொழி தகுதித் தேர்வு (பத்தாம் வகுப்புத் தரம் (தாள் – I)) (விரிந்துரைக்கும் வகை)

தேர்வு நாள் : 22.03.2026 மு.ப.

பதிவு எண் :

விண்ணப்பதாரரின் கையொப்பம் மற்றும் தேதி

சான்று

நான் விண்ணப்பதாரரின் நுழைவுச்சீட்டில் உள்ள பதிவு எண், புகைப்படம் மற்றும் கையொப்பம் ஆகியவற்றினை சரிபார்த்த பின் இந்த வினா விடைத் தொகுப்பினை வழங்கினேன்.

அறைக்கண்காணிப்பாளரின் கையொப்பம் மற்றும் தேதி

சான்று

(தேர்வு முடிவுற்றவுடன் கையொப்பமிட வேண்டும்)

நான் இந்த வினா விடைத் தொகுப்பில் பதிலளிக்காத விடைப் பகுதிகளை தேர்வு எழுதப் பயன்படுத்திய கருப்பு மை பேனா (மையூற்று பேனா அல்லது பந்துமுனை பேனா அல்லது ஜெல் பேனா)வினால் குறுக்குக் கோடிட்டுள்ளேன் என உறுதியளிக்கிறேன்.

விண்ணப்பதாரரின் கையொப்பம் மற்றும் தேதி

TNPSC - SPECIMEN
Do not use this area

TNPSC-SPECIMEN
Do not use this area

தாள் – I

தமிழ்மொழி தகுதித் தேர்வு

(விரிந்துரைக்கும் வகை)

(பத்தாம் வகுப்புத் தரம்)

கால அளவு : மூன்று மணி நேரம் மொத்த மதிப்பெண்கள் : 100

(இவ்வினா-விடைத்தாள் தொகுப்பு 32 பக்கங்களைக் கொண்டுள்ளது)

அறிவுரைகள்

(கீழ்க்கண்ட அறிவுரைகளை தேர்வர்கள் தவறாமல் பின்பற்ற வேண்டும்)

1. தாள்-I-இல் குறைந்தபட்ச தகுதி மதிப்பெண்கள் 40 பெற்றால் மட்டுமே பிறதாள்கள் மதிப்பீடு செய்யப்படும்.

2. தேர்வர் இவ்வினா-விடைத்தாள் தொகுப்பு மொத்தம் 32 பக்கங்களைக் கொண்டுள்ளது என்பதை முதலில் உறுதி செய்து கொள்ள வேண்டும். வினா-விடைத்தாள் தொகுப்பில் ஏதேனும் குறைபாடு இருப்பின், தேர்வர் அதனை தேர்வு தொடங்குவதற்கு முன்னதாக அறைக்கண்காணிப்பாளரிடம் தெரிவித்து, சரியாக உள்ள வேறொரு முழுமையான வினா-விடைத்தாள் தொகுப்பினை கட்டாயம் பெற்றுக்கொள்ள வேண்டும். தேர்வு தொடங்கிய பின்பு குறைபாடு குறித்து முறையிட்டால், மாற்றித் தரப்படமாட்டாது.

3. (i) தேர்வர் ஒவ்வொரு வினாவிற்கும் விடை எழுதுவதற்கென வினா-விடைத்தாள் தொகுப்பில் ஒதுக்கப்பட்ட இடத்தில் மட்டுமே விடையளிக்க வேண்டும். விடையளிக்க ஒதுக்கப்பட்ட இடத்திற்கு வெளியே எதையும் எழுதக்கூடாது.

   (ii) தேர்வர் வினாக்களுக்கு விடையளித்த பின்னர் மீதமுள்ள வெற்றிடங்களையும் விடையளிக்காத வினாவிற்கான வெற்றிடங்களையும் அனுமதிக்கப்பட்ட கருமை நிற மை பேனாவினால் குறுக்கு கோடிட்டு கண்டிப்பாக அடித்துவிட வேண்டும். அடித்த பகுதிகளில் கையொப்பம் இடக்கூடாது.

4. தேர்வர் இவ்வினா-விடைத்தாள் தொகுப்பில் ஒவ்வொரு பிரிவிலும் அறிவுறுத்தப்பட்டுள்ள எண்ணிக்கையிலான வினாக்களுக்கு மட்டுமே விடையளிக்க வேண்டும். அதற்கு மிகையான எண்ணிக்கையிலான வினாக்களுக்கு விடையளித்தால், ஒவ்வொரு பிரிவின் முடிவிலும் மிகையான எண்ணிக்கையில் விடையளிக்கப்பட்டவை கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது.

TNPSC - SPECIMEN

5. தேர்வர் இந்த வினா-விடைத்தாள் தொகுப்பிலிருந்து எந்தத் தாளையும் கிழித்துவிடக் கூடாது.

6. இத்தேர்வைப் பொறுத்தவரை, அழகாக எழுதுவதற்காகவும், எழுத்துப்பிழையின்றி எழுதுவதற்காகவும் தனியாக மதிப்பெண்கள் ஒதுக்கப்படவில்லை.

7. தேர்வர் விடையளிக்கும் போது தேவைப்படும் இடங்களில் வினா எண்ணையும், அதன் உட்பிரிவையும் தவறாமல் குறிப்பிட வேண்டும்.

8. தேர்வர் கடித வடிவிலான வினாக்களுக்கு விடையளிக்கும் பொழுது தங்களது பெயரையோ, பதிவெண்ணையோ எழுதக்கூடாது. தங்களது பெயரில் கையொப்பமிடவும் அனுமதியில்லை. அவ்வாறான வினாக்களுக்கு பதிலளிக்கும்பொழுது வினாக்களில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர் மற்றும் முகவரியையே பயன்படுத்த வேண்டும்.

வினாக்களில் பெயர், முகவரி ஆகியவை குறிப்பிடப்படவில்லையெனில், 'அனுப்புநர்', 'பெறுநர்' முகவரிகளில் 'அ ஆ இ' அல்லது 'எக்ஸ் ஒய் இசட்' போன்ற பொதுப் பெயர்களை மட்டுமே எழுத வேண்டும்.

9. **கீழ்க்கண்ட தவறுகள் கண்டறியப்பட்டால், விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.**
The Answer Booklets will be invalidated if the following errors are found :

(i) வினா விடைத்தாள் தொகுப்பில் கருமை நிற மை பேனாக்களைத் தவிர மற்ற நிற மை பேனாக்களை (Whitener, Sketch pens, Pencil, வண்ணப் பென்சில்கள், வண்ண மைப்பேனா, Crayons, etc.,) உபயோகப்படுத்தினால்.

(ii) தேர்வர், தங்களது பதிவு எண்ணை இவ்வினா-விடைத்தாள் தொகுப்பில் எந்த இடத்திலாவது எழுதினால்.

(iii) வினா விடைத்தாள் தொகுப்பில் எந்த ஒரு இடத்திலும் தொடர்பற்ற வகையில் பெயர் மற்றும் விவரங்களை மற்ற இடங்களில் எழுதுதல், மதக் குறியீட்டினை எழுதுதல் தேர்வரின் பெயர் எழுதுதல், கையொப்பம், தொலைபேசி எண், அலைபேசி எண் வேறு ஏதேனும் பெயர்களை எழுதுதல், சுருக்கொப்பம் அல்லது முகவரி ஆகிய பொருத்தமற்ற குறியீடுகளை இடுதல் (அ) எழுதுதல்.

(iv) தேர்வர் தன்னுடைய தேர்ச்சி தொடர்பாக விடைத்தாள் தொகுப்பில் தேர்வாளரின் பரிவைத் தூண்டும் வகையில் எழுதுதல்.

(v) தேர்வர் கேள்விக்கு தொடர்பில்லாத அல்லது தேர்வுக்கு சம்பந்தமில்லாத ஏதாவது கருத்துக்கள் மற்றும் பொருத்தமில்லாதவற்றை தனது அடையாளத்தை வெளிப்படுத்தும் வகையில் எழுதுதல்.

(vi) குறிப்பிட்டு அனுமதிக்கப்பட்ட நிகழ்வுகளைத் தவிர, தேர்வர்கள் ஒருபகுதி ஆங்கிலத்திலும் மற்றொரு பகுதி தமிழிலும் விடை எழுதுவது. எனினும் மொழிபெயர்க்க இயலாத தொழில்நுட்ப வார்த்தைகள் (Technical words) அந்தந்த மொழியில் உள்ளவாறே எழுதலாம். மாறாக வாக்கியம் முழுவதும் / விடை முழுவதும் மொழி மாற்றி எழுதக் கூடாது.

(vii) பிற தேர்வர்களின் இருக்கையில் தவறாக அமர்ந்து தேர்வு எழுதுதல் / பிற தேர்வர்களின் விடைப்புத்தகத்தைப் பயன்படுத்துவது.

(viii) வினா விடைப்புத்தகத்தில் அச்சிடப்பட்டுள்ள பட்டைக் குறியீட்டினை சேதப்படுத்துதல்.

(ix) வினா விடைத்தாள் தொகுப்பின் முதல் பக்கத்தில் இதற்கென உள்ள இரண்டு இடங்களிலும் தேர்வர் கையொப்பமிடாத நேர்வுகளில்.

TNPSC SPECIMEN

அலகு — 1 (அ)

குறிப்பு : **i) கொடுக்கப்பட்ட தமிழ்ப் பகுதியை நன்கு படித்து கருத்துச் சிதையாமல் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கவும் :**

(1 × 10 = 10)

Q.No. 1	தேவதாசி முறை தேவதாசி (சமஸ்கிருதம்) அல்லது தேவர் அடியாள் (தமிழ்) என்ற வார்த்தையின் பொருள் 'கடவுளின் சேவகர்' என்பதாகும். பெண் குழந்தையைக் கோவிலுக்கு நேர்த்தி கடனாக அர்ப்பணிக்கும் வழக்கம் இருந்தது. அவர்கள் கோயிலைக் கவனித்துக் கொள்வதோடு மட்டுமல்லாமல், பரத நாட்டியம் மற்றும் பிற பாரம்பரிய இந்தியக் கலைகளையும் கற்றுக் கொண்டனர். பிற்காலங்களில் அவர்கள் மோசமாக நடத்தப்பட்டு அவமானப்படுத்தப்பட்டனர். மேலும் தேவதாசிகள் தங்கள் கண்ணியம், பெருமை உணர்வு, சுயமரியாதை மற்றும் கௌரவம் ஆகியவற்றை இழந்தனர். இந்தியாவின் முதல் பெண் மருத்துவரான டாக்டர். முத்துலட்சுமி அம்மையார், கொடுமையான தேவதாசி முறையை தமிழ்நாட்டிலிருந்து ஒழிப்பதற்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். தேவதாசி முறைக்கு எதிரான அவரது போராட்டத்தைப் பாராட்டும் வகையில் 1929-இல் அவர் சென்னை சட்டமன்றத்திற்குப் பரிந்துரைக்கப்பட்டார். பெரியார் ஈ.வெ.ரா. "தேவதாசி ஒழிப்பு மசோதாவை" நிறைவேற்றுவதில் முக்கியக் கருவியாக செயல்பட்டார். 1930-இல் டாக்டர் முத்துலட்சுமி அம்மையார் இம்மசோதாவைச் சென்னை சட்டமன்றத்தில் முன்மொழிந்தார்.

அலகு — 1 (ஆ)

குறிப்பு : **ii) கொடுக்கப்பட்ட ஆங்கிலப் பகுதியை நன்கு படித்து கருத்துச் சிதையாமல் தமிழில் மொழி பெயர்க்கவும் :**

(1 × 10 = 10)

Q.No. 2	Five Cardinal Principles of Confucius Ethics 1. Humaneness 2. Righteousness 3. Propriety 4. Wisdom 5. Trustworthiness Confucius said that wisdom grows from the family and that the foundation of society is the disciplined individual is an orderly family. The superior man, according to him, is not merely intelligent or scholarly, but his character should be exemplary. The superior man of Confucius possesses three virtues : intelligence, courage, and goodwill. Though Confucius insisted on children obeying parents and wife her husband, he also clearly proposed that "when the command is wrong a son should resist his father and a minister should resist the prince". When asked about government, he said that there are three requisites for it : "There should be sufficiency of food, sufficiency of military equipment and confidence of the people in their ruler."

TNPSC - SPECIMEN

அலகு — 2

குறிப்பு : **i) கொடுக்கப்பட்ட பகுதியை அதன் அளவில் மூன்றில் ஒரு பங்கு அளவில் சுருக்கி உங்கள் சொந்த நடையில் எழுதுக. தலைப்பு தேவையில்லை.**

(1 × 10 = 10)

Q.No. 3	எதுவுமே இல்லாத பெருவெளியில் அண்டத் தோற்றத்திற்குக் காரணமான பரமாணு பேரொலியுடன் தோன்றியது. உருவம் இல்லாத காற்று முதலான பூதங்களின் அணுக்களுடன் வளர்கின்ற வானம் என்னும் முதல் பூதத்தின் ஊழி அது. அந்த அணுக்களின் ஆற்றல் கிளர்ந்து பருப்பொருள்கள் சிதறும்படியாகப் பல பல ஊழிக் காலங்கள் கடந்து சென்றன. பிறகு நெருப்புப் பந்து போலப் புவி உருவாகி விளங்கிய ஊழிக்காலம் தொடர்ந்தது. பின்னர் பூமி குளிரும்படியாகத் தொடர்ந்து மழை பொழிந்த ஊழிக்காலம் கடந்தது. அவ்வாறு தொடர்ந்து பெய்த மழையால் பூமி வெள்ளத்தில் மூழ்கியது. மீண்டும் மீண்டும் நிறை வெள்ளத்தால் நிறைந்த இப்பெரிய உலகத்தில், உயிர்கள் உருவாகி வாழ்வதற்கு ஏற்ற சூழல் தோன்றியது. அச்சூழலில் உயிர்கள் தோன்றி நிலைபெறும் படியான ஊழிக்காலம் வந்தது. என்று பரிபாடலில் கீரந்தையார் கூறுகிறார். இலக்கியங்கள் அவை தோன்றிய காலங்களில் இருந்த மக்களின் நாகரிகம், பண்பாடு ஆகியவற்றைக் கூறுவதோடு அன்று மக்களிடையே நிலவிய அறிவியல் கோட்பாடுகளையும் விளக்குகின்றன. புவியியல் உருவாக்கம் குறித்து இன்றைய அறிவியல் கூறுகிற கருத்துகளை அன்றே சுட்டிக்காட்டிய பரிபாடல் வியப்பிலும் வியப்பைத் தருகிறது.

அலகு — 3

குறிப்பு : **i) கொடுக்கப்பட்டுள்ள பத்தியை நன்கு படித்து அதன் கீழ் கேட்கப்பட்டுள்ள ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

ii) ஒவ்வொரு வினாவிற்கும் இரண்டு மதிப்பெண்கள்.

(5 × 2 = 10)

Q.No. 4	பொருள் உணர்திறன் : அறிவுத் திறமையைப் புலப்படுத்துவதோடு இன்பத்தை அளிக்கும் முறைப்படுத்தப்பட்ட படைப்புகள், செயல்கள் எல்லாம் அழகு வாய்ந்தவையாக உள்ளன. அழகான பொருள் வற்றாத இன்ப ஊற்று அல்லவா? நம் உள்ளத்தில் அழகு உணர்ச்சியைத் தூண்டும் முறையில் செஞ்சொற்களைக் கொண்டு வாழ்க்கை அனுபவங்களை இழைத்துக்காட்டும் அரிய பணியை இலக்கியம் செய்கிறது. "இலக்கியம்" என்பது யாது? என்னும் வினாவிற்கு மிகச் சுருக்கமாக விடை கூறுவதனால் அழகுணர்ச்சி ததும்புமாறு எழுதப்படுபவையாவும் "இலக்கியம்" எனலாம். இந்த வரையறையை அளவுகோலாகக் கொண்டால் எழுத்தாளர்கள் எழுதுவன எல்லாம் இலக்கியம் ஆகா என்பது வெளிப்படை. பொதுவாக நாம் குடியிருப்பதற்குக் கட்டப்படும் வீடுகள் எல்லாம் வெயில், மழை, குளிர் போன்றவற்றால் பாதிக்கப்படாமல் நாம் வாழ்வதற்காகக் கட்டப்படுகின்றன. எனவே அதன் நோக்கம் "பயன்பாடு" தான். அதில் கலையழகு சிற்பக்கலையின் சிறப்பு. பொதுவாக அமைவது இல்லை. இதைப் போன்றதே பல நோக்கங்களோடு எழுதப்படுகின்ற நூல்கள். ஆனால் அவற்றில் கலையழகும் கற்பனைச் சிறப்பும் வாய்ந்தால் மட்டுமே இலக்கியமாகப் போற்றப்படும் தகுதியைப் பெறுகின்றன. இத்தகைய படைப்புகளின் கலையழகில் ஈடுபடுகிற பொழுது அந்த நூலின் பொருளையும் அதனை எடுத்துரைக்கும் முறையையும் நாம் மறந்து விடுகிறோம். ஆனால் அந்நூலின் சொல் நயமும் பொருள் நயமும் நடைநயமும் நம் மனத்தை ஈர்த்து இன்பம் அளிக்கின்றன.

வினாக்கள் :

1. இலக்கியம் செய்யும் பணி யாது?

2. 'எழுத்தாளர்கள் எழுதுவன எல்லாம் இலக்கியம் ஆகா' என ஆசிரியர் கூறுவதன் காரணம் என்ன?

TNPSC - SPECIMEN

3.	இலக்கியப் பயன்பாடு இலக்கியம் ஆகுமா?
4.	ஒரு நூல் எப்போது இலக்கியம் ஆகும் தகுதியைப் பெறும்?
5.	ஒரு நூலில் இன்பம் அளிப்பன எவை?

அலகு — 4

குறிப்பு : **i) கொடுக்கப்பட்டுள்ள சுருக்கக் குறிப்புக்களைக் கொண்டு விரிவாக எழுதுக.**

ii) 300 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும். **(1 × 10 = 10)**

Q.No. 5	புகையிலை – புகைபிடித்தல் – நுரையீரல் புற்று மற்றும் நுரையீரல் காசநோய்க்கு வழிவகுத்தல் – இரைப்பை மற்றும் முன்சிறுகுடல் புண்கள் (அல்சர்) ஏற்படுதல் – வாய்ப்புற்று – புகைபிடித்தலைத் தடுத்தல்.

அலகு — 5

குறிப்பு : **i) திருக்குறள் தொடர்பான கட்டுரை வரைதல்.**

ii) கொடுக்கப்பட்டுள்ள ஐந்து வினாக்களில் ஏதேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விடையளிக்கவும்.

iii) 300 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

(1 × 15 = 15)

Q.No. 6	(அ)	மதச் சார்பற்ற தனித்தன்மையுள்ள இலக்கியம் திருக்குறள் என்பதற்கு வான்சிறப்பே சான்று - இக்கூற்றை நிறுவுக.
	(ஆ)	இனியவை கூறுவதால் மனித வாழ்விற்குக் கிடைக்கும் நன்மைகள் யாவை?
	(இ)	இல்லறவியலில் மக்களுக்கு வள்ளுவர் எடுத்துரைக்கும் வாழ்வியல் முறைகளை விளக்குக.
	(ஈ)	அறிவினை மயக்கும் மதுப்பழக்கத்தைக் கண்டித்து வள்ளுவர் கூறுவன யாவை?
	(உ)	பொருளின் இன்றியமையாமை குறித்து வள்ளுவர் கூறுவன யாவை?

TNPSC - SPECIMEN

அலகு — 6

குறிப்பு : **i)** **கடிதம் வரைதல்**

ii) **கொடுக்கப்பட்ட மூன்று வினாக்களில் ஏதேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விடையளிக்கவும்.**

iii) **250 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்.**

(1 × 15 = 15)

Q.No. 7	(அ)	பள்ளிகளில் உயர் கல்வி, தொழில் மற்றும் வேலைவாய்ப்பிற்கு வழிகாட்டும் ஆலோசனை மையம் அமைத்தல் தொடர்பாக பள்ளிக் கல்வித்துறை அமைச்சருக்குக் கடிதம் வரைக.
	(ஆ)	முதலமைச்சர் காலை உணவுத் திட்டத்தினால் அரசு தொடக்கப்பள்ளி மாணவர்களிடம் ஏற்படுத்தும் தாக்கம் குறித்து அறிக்கை ஒன்றைத் தயார் செய்து பள்ளிக் கல்வித்துறை இயக்குநருக்கு அனுப்புக.
	(இ)	பொதுப்பணிகள் – 22.1.2019 முதல் 30.1.2019 வரை நடைபெற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தில் பங்கேற்ற அரசுப்பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கைகள் மற்றும் குற்றவியல் வழக்குகள் – மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க அவற்றின் மீதான மேல் நடவடிக்கைகளைக் கைவிடுதல் – ஆணை வெளியிடுதல்.

அலகு — 7

குறிப்பு : **i)** **பின்வரும் ஐந்து பிரிவுகளில் ஒவ்வொரு பிரிவிலும் நான்கு வினாக்கள் உள்ளன.**

ii) **ஒவ்வொரு பிரிவிலும் உள்ள அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**

iii) **ஒவ்வொரு பிரிவிற்கும் நான்கு மதிப்பெண்கள்.**

iv) **ஐந்து பிரிவுகளுக்கும் சேர்த்து மொத்தம் இருபது மதிப்பெண்கள்.**

(5 × 4 = 20)

Q.No. 8	**கீழ்க்காணும் சொற்களை உமது சொந்த வாக்கியத்தில் அமைத்து எழுதுக.**	
	(1)	நீண்ட நீண்ட
	(2)	புழு பூச்சிகள்
	(3)	அடுத்தடுத்த
	(4)	விட்டுவிட

TNPSC - SPECIMEN

Q.No. 9	**பின்வரும் இணைச் சொற்களைப் பயன்படுத்தி ஒரே தொடர் அமைக்க.**
	(1) இரவும் பகலும்
	(2) உயர்வு தாழ்வு
	(3) நகமும் சதையும்
	(4) இன்ப துன்பம்
Q.No. 10	**பிரித்தெழுதுக.**
	(1) மணியழகு
	(2) அவ்வீடு
	(3) தமிழ்த்துறை
	(4) சங்கத்தமிழ்
Q.No. 11	**எதிர்மறை வாக்கியமாக மாற்றி எழுதுக.**
	(1) குமரன் மழையில் நனைந்தான்
	(2) நாளை அனைத்து வண்டிகளும் இயங்கும்
	(3) அவள் நன்றாகப் படிப்பாள்
	(4) மன்னனின் குதிரைகள் வேகமாக ஓடும்
Q.No. 12	**பிழை நீக்கி எழுதுக :**
	(1) மனிதர்கள் தனித்து வாழ பிறந்தவர்கள் அல்ல
	(2) யானைக் குட்டி; சிங்கக் குட்டி
	(3) குயிலுக்கு கூடு கட்ட தெரியாது
	(4) ஆடுகள் கூட்டம் கூட்டமாக மேய்ந்தது

TNPSC - SPECIMEN